மாநகராட்சி அலுவலகம்
ஒசூர்

ந.க.எண்.2814/2025/எப்1

நாள்.17.04.2025

பொருள் – மனைப்பிரிவு– ஒசூர் மாநகராட்சி– ஓசூர் கிராமம்– சர்வேஎண்.711/10–ல் 2357.00ச.மீ பரப்புள்ள சமுதாயக்கூட இடத்தினை குடியிருப்பு மனைகளாக மாற்றியமைத்து தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது – மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல்–தொடர்பாக.

பார்வை –

1. உறுப்பினர், செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் கடிதம் ந.க.எண்13993 /2018/TCP–7 நாள் 25.11.2019.
2. உறுப்பினர், செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் கடிதம் ந.க.எண் 8FCL8Q0L/2025/TCP நாள் 07.03.2025.
3. மனுதாரரின் விண்ணப்பம் நாள். 10.03.2025
4. இரசீது எண். 153/01/5/25–26/0000546, 153/01/5/25–26/0000545 நாள்.16.04.2025

* * * *

உத்திரவு :

ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஓசூர் கிராமம் சர்வேஎண்.711/10–ல் 51860.03ச.மீ(12.815 ஏக்கர்) பரப்புள்ளள இடத்தை பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர் கடிதத்தின்படி உட்பிரிவு செய்ய ம.வ/ந.ஊ.இ.எண்.29/2019 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அதற்கு மாநகராட்சியால் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவினை சுற்றி 2–3 கீ.மீட்டர் தொலைவிற்குள் சமுதாய கூடம் அமைந்துள்ளதால் இம்மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட விற்பனைக்குரிய சமுதாயக்கூட இடத்தினை குடியிருப்பு மனைகளாக மாற்றியமைக்க மனுதாரர் கோரியதன் அடிப்படையில் பார்வை 2ல் கண்டுள்ள உத்திரவின்படி உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், ஒசூர் அவர்களால் குடியிருப்பு மனைகளாக மாற்றியமைத்து ம.வ/ஒ.பு.ந.கு (கி.மா) SWP No: 41/2025 மற்றும் ம.வ/தி.அ/ஒபுந.கு.(கி.மா) SWPஎண்.13/2025 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி பார்வை 3ல் காணும் மனுதாரரின் மனுவில் மேற்படி மனைப்பிரிவிற்கு மாநகராட்சியின் இறுதி ஒப்புதல் வழங்க கோரி மனு செய்யப்பட்டு அதற்கான அனுமதி கட்டணங்களும் மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2ல் காணும் உத்திரவில் உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், ஒசூர் அவர்களால் குடியிருப்பு மனைகளாக மாற்றியமைத்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு பார்வை 1ல் கணும் மனைப்பிரிவு அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஓசூர் கிராமம், சர்வேஎண்.711/10–ல் 2357.00ச.மீ பரப்புள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

17.4.25

ஆணையாளருக்காக
ஒசூர் மாநகராட்சி

17/4/25

பெறுநர்:–

M/s.அமேசிங் ட்வெல்லர்ஸ் எல்எல்பி,
திரு.கே.தாஸ்,
#54, மேட்டுப்பாளையம் ரோடு, ஜிஎன் மில்ஸ்,
கோயம்புத்தூர்–641029